**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

***கிழமை இல. 23-2020***

**கல்வி - ஆண்டிறுதித்தேர்வு 2020**

*மதிப்பீட்டுப் பரீட்சை*

1-9 ஆம் வகுப்பினருக்கு இணையவழி மூலம் 06.06.2020 அன்று

நேரம்:

ஆண்டு 1-3 10:00 – 11:15 (09:30 இற்கு இணையவழியில் இணைதல்)

ஆண்டு 4 10:00 – 11:30 (09:30 இற்கு இணையவழியில் இணைதல்)

ஆண்டு 5-9 11:30 – 13:30 (11:00 இற்கு இணையவழியில் இணைதல்)

1. *பரீட்சை ஆரம்பமாகவிருக்கும் நேரத்திலிருந்து 30 நிமிடத்திற்கு முன்னதாக 1-9ஆம் வகுப்பு மாணவர்கள் இணையவழியில் இணைந்து பரீட்சைக்குத் தயார்நிலையில் இருத்தல் வேண்டும்.*
2. *பரீட்சைத்தாள் வழங்கப்படும் நேரம் (மேற்குறித்த) மட்டுமே அப்பரீட்சையின் வினாத்தாளில் விடைகள் மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் உண்டு.*
3. *எனவே தங்களின் அனைத்து பிள்ளைகளின் இணையவழிப் பாவனையை முன்கூட்டியே பரீட்சார்த்தம் செய்து உறுதிசெய்துகொள்ளுங்கள்.*
4. *வழங்கப்பட்ட நேரத்துக்குமேல் எக்காரணம் கொண்டும் பரீட்சைத்தாள் மீள்வழங்கப்படமாட்டாது. இது அனைத்து வளாகங்களுக்குமான முடிவு என்பது குறிப்பிடத்தக்கது.*

***''Teams'' இல் பதிவுசெய்வதில் சிரமம் இருப்பவர்கள் விரைவில் எம்மோடு தொடர்புகொள்ளவும்.***

*எழுத்துத்தேர்வு*

10ஆம் வகுப்புக்கான பரீட்சை தமிழர் வள ஆலோசனைமைத்தில் 07.06.2020 அன்று நடைபெறும். மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வு வினாத்தாள் வழங்கப்பட்டு தேர்வு 10:00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். கேட்டல் பகுதி, வினாத்தாள் வழங்கப்பட்டு 30 மணித்துளிகளுக்குப் பின்னர் நடாத்தப்படும். இதற்கான விதிமுறைகளை முழுமையாக வாசித்து விளங்கிவரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

**மாணவர்கள் பரீட்சை நடைபெறவிருக்கும் மண்டபத்தினுள் காலை 09:15 இற்கு நுழையக்கூடிய வகையில் சமூகமளித்தல் மிக அவசியம்.**

**"இக்கல்வியாண்டின் இறுதிநாள் 13.06.2020 என்று அறிவிக்கின்றோம்".**

## நிதி

அன்னையினால் அறவிடப்பட்ட கட்டணங்களை இன்னும் செலுத்தாதவர்களின் பெயர்ப்பட்டியல் “VISMA INKASSO” வினரிற்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

## பெற்றோர்கூட்டம் 30.05.2020 நேரம்:12:50-14:20.

அனைத்துப் பெற்றோரையும் இணைப்பதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டதால் கூட்டம் 13:15 மணியளவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் பங்கேற்று தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எம்மோடு பகிர்ந்துகொண்ட எமது வளாகப் பெற்றோர் அனைவருக்கும் நன்றி. அத்துடன் இக்கூட்டத்தின் அறிக்கையை எழுதமுன்வந்த பெற்றோருக்கும் நன்றி.

## ஒன்றுகூடல் 2020

கோடைகால விடுமுறை முடிந்து அடுத்துவரும் கல்வியாண்டின் ஆரம்பத்தில் (அன்றைய சூழ்நிலையைப்பொறுத்து) ஒன்றுகூடல் ஒன்றை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். எப்போது?எங்கே?எவ்வாறு? என்ற விபரத்தினை முடிவுசெய்தவுடன் அறியத்தருவோம். அதற்கு முன்பு ஆசிரியர்களுடன் சேர்ந்து வகுப்புரீதியாக ஒன்றுகூடலை நடாத்த அல்லது பங்குகொள்ள எண்ணினால் நோர்வே சுகாதார அமைப்பினதும் அன்னையினதும் இது சம்மந்தமான சட்டதிட்டங்களை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துதல் அவசியமானது.

இணைப்புகள்:

1. 10ஆம் ஆண்டு பரீட்சைக்கான விதிமுறைகள்.
2. ஒன்றுகூடலுக்கான விதிமுறைகள்.
3. 30.05.2020 இணையவழிப் பெற்றோர்கூட்ட அறிக்கை

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**
**தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!**